Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 311

திங்கட்கிழமை
03 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## இன்று மின்வெட்டு

கொழும்பு, ஒக். 3
இரண்டு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் இன்று மின் வெட்டை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

வடக்கு - கிழக்கில் முதன்முறையாக

## அனியூரிசம் எனும் மூளைநோய்க்கு நவீன முறையிலான சிகிச்சை!

வெற்றிகரமாகச் சாதித்துக் காட்டியது யாழ்.போதனா

யாழ்ப்பாணம், ஒக். 3
அனியூரிசம் எனப்படும் மூளை வியாதி மூலம் பாதிப்படைந்தவருக்கு வடக்கு - கிழக்கில் முதன் முறையாக, யாழ். போதனா மருத்துவமனையில் சத்திரசிகிச்சையின்றி குருதிக் குழாய் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை வெற்றியளித்துள்ளது.
மூளையுடன் தொடர்புடைய நரம்பில், குருதிக் குழாய் பலவீனமடைவதன் மூலம் அது வெடித்து குருதிக் கசிவு ஏற்பட்டு இறக்கும் நிலையை உரு வாக்கும் நோயே அனியூரிசம்.
இதுவரை காலமும் 11 ➤



“அப்ப இனிமேல் இந்த நாட்டின்ர ‘குடிமகன்கள்’ பாடும் அம்போ தானோ?”



பௌத்த மயமாக்கல் சர்ச்சை:

## திருக்கோணேஸ்வரத்துக்கு இந்தியத் தூதுவர் திடீர் பயணம்

திருகோணமலை, ஒக். 3
திருகோணமலையிலுள்ள பாடல்பெற்ற திருத்தலமான திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே திடீர் பயணமாக நேற்றுச் சென்றுள்ளார். அந்த ஆலயம் பௌத்த மயமாக்கலுக்கு உட்படும் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ள நிலையில் அவரின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.
திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் பாதுகாப்பதற்கு இந் தியாவின் உதவியை நாடுவதற்கு இந்து சமய அமைப்புக் கள் கூட்டாக அண்மையில் முடிவெடுத்திருந்தமை நினை வில்கொள்ளத்தக்கது. (அ-ஒ-5)
(விரிவான செய்தி - பக்:4)

மாணவர் எதிர்ப்பையும் மீறி

# யாழ்.பல்கலைக்கழகத்துக்கு சீனா ரூ.43 லட்சம் நிதியுதவி!

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 3
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாண வர் நலச் சேவைகளுக்கென சீனத் தூதர கத்தால் ரூபா 43 இலட்சம் நிதி யுதவி வழங்கப்பட்டுள்ளது. 11 ➤



வடக்கு மாகாணசபை

## முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஒக். 3
வடக்கு மாகாணசபையின் முன் னாள் உறுப்பினர் சு.பசுபதிப் பிள்ளை மாரடைப்புக் காரணமாக நேற்று உயிரிழந்தார். 11 ➤

பரீட்சை நடத்துவதில் கடமை தவறிய

## பல்கலை துறைத்தலைவர் உட்பட மூன்று பேர் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கு பரீட்சைநடத்துவதில்கடமைதவறிய குற்றச்சாட்டுக்காக துறைத்தலைவர், விரிவுரையாளர், நிர்வாக அதிகாரி என மூவர் விசாரணைகள் முடியும் வரையில் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். 11 ➤

## மூத்த பிரஜைகளுக்கான விசேட வட்டித் திட்டம் ரத்து

கொழும்பு, ஒக். 3
மூத்த பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்பு வட்டி திட்டம் நேற்றுமுன்தினம் முதல் உட னடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. 11 ➤

## ‘டி.சி.எல்’ சாராயம்; விலை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 3
‘டி.சி.எல்’ ரக மதுபானம் 750 மில்லிலீற்றர் போத்த லின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைமுறையாகும் வகை யில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன், 2 வகை சிகரெட்டுக்களின் விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## வீடியோ உரையாடல்; மாணவியை மிரட்டி துஷ்பிரயோகம்

ஏழாலையைச் சேர்ந்த சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 3
வலிகாமம் வலயத்துக்கு உட்பட்ட பாட சாலைஒன்றில்கல்விபயிலும்15 வயது மாணவியின் வீடியோ உரையாடலை பதிவு செய்து, அதைவைத்து மிரட்டி, அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஏழாலையைச் சேர்ந்த 20 மற்றும் 25 வயது இளை ஞர்கள் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 11 ➤

## யாழ். கோட்டையில் சமூகப்பிறழ்வு; திடீர் சுற்றிவளைப்புக்கு திட்டம்

மாநகர சபை முதல்வர் மணிவண்ணன் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 3
யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் திடீர் சுற்றிவளைப்புகள் இனிமேல் மேற் கொள்ளப்படும். இதன்போது சமூகச் சீரழிவு, போதைப்பொருள் பாவனையா ளர்கள் கண்டறியப்பட்டால் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகர சபை யின் முதல்வர் விஸ்வலிங்கம் மணி வண்ணன் எச்சரித்துள்ளார்.
யாழ். கோட்டை சூழலிலே அதிகளவான சமூக சீரழிவுச் செயற்பாடுகள் 10 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா படையதிகாரிகளுக்கு தடைவிதிக்க பிரிட்டன் திட்டம்

## தீவிரமாக ஆராய்கின்றது என்று தகவல்கள்



**கொழும்பு, ஒக்.3**

**சிறிலங்காவின் முப்படைகளின் தலைமை அதிகாரியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகவும், ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகவும் தடைகளை விதிப்பதற்கான சாத்தியங்கள் தொடர்பாக பிரிட்டன் அரசாங்கம் ஆராய்கின்றது என்று பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் ஜெஸி நோர்மனை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் நிலையில், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரம் உள்ளடங்கலாக இலங்கையின் தற்போதைய நிலைவரத்தை தமது அரசாங்கம் மிக உன்னிப்பாக மதிப்பாய்வு செய்து வருகின்றது என்றும், அதன்படி 'தடைவிதிப்பு' உள்ளடங்கலாகத் தம்வசமுள்ள இராஜதந்திர உத்திகளை எவ்வாறு பிரயோகிக்கமுடியும் என்பது தொடர்பாக தீவிரமாக ஆராயப்படுகின்றது என்றும் அமைச்சர் ஜெஸி நோர்மன் தெரிவித்தார் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் ஏனைய இராணுவத்தினருக்கு எதிராகத் தடைகளை விதித்தல் தொடர்பான அண்மைய மதிப்பீடு தொடர்பாக தொழிற்கட்சி உறுப்பினர் பெத் வின்றால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ஜெஸி நோர்மன் இவ்வாறு தெரிவித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியின் நிதிச் செயலாளராகப் பதவிவகித்த நோர்மன், பிரிட்டன் பிரதமராக எலிசபெத் ட்ரஸ் பதவியேற்றுக்கொண்டதை அடுத்து வெற்றிடமான வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் பதவிக்குக் கடந்த செப்ரெம்பர் 7ஆம் திகதி நியமிக்கப்பட்டார். (ஏ-இ)

# கனிசமாக உயர்வடைந்தது சிறிலங்காவின் பணவீக்கம்

கொழும்பு, ஒக். 3

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதம் கனிசமான அளவில் உயர்வடைந்து 69.8 சதவீதமாகப் பதிவாகியிருக்கின்றது. இது கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 64.3 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், செப்ரெம்பரில் 5.5 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருக்கின்றது.

கடந்த ஒரு மாதகாலத்தில் பழங்கள், கோழி இறைச்சி, கோதுமை மா உள்ளிட்ட உணவுப்பொருள்கள் மற்றும் வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, உணவகம், சுகாதாரம், கல்வி, தொடர்பாடல் போன்ற பொருள்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே பணவீக்க உயர்வுக்குப் பிரதான காரணிகளாக அமைந்துள்ளன என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உணவு மற்றும் உணவல்லாப் பொருள்களின் மாதாந்த விலை அதிகரிப்பு பணவீக்கம் உயர்வடைவதற்கான முக்கியமான காரணமாக அமைந்துள்ளது என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஒகஸ்ட் மாதம் 93.7 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவுப் பணவீக்கம் செப்ரெம்பர் மாதத்தில் 94.9 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஒகஸ்ட் மாதம் 50.2 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் செப்ரெம்பர் மாதம் 57.6 சதவீதமாக உயர்வடைந்தது.

இந்தக் கணிப்பீட்டின்படி பொருளாதாரத்தின் அடிப்படைப் பண வீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் கடந்த ஒகஸ்ட் மாதம் 46.6 சதவீதமாகப் பதிவாகியிருந்தது. அது செப்ரெம்பர் மாதம் 50.2 சதவீதமாக உயர்வடைந்தது. அதேவேளை, ஒகஸ்ட் மாதம் 20.3 சதவீதமாகப் பதிவான ஆண்டுக்கான சராசரி மையப் பணவீக்கம், செப்ரெம்பர் மாதம் 24.1 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஒகஸ்ட் ஆகிய கடந்த 8 மாதகாலப் பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அமைவாகக் கணிப்பிடப்பட்ட பணவீக்கமானது முறையே 14.2, 15.1, 18.7, 29.8, 39.1, 54.6, 60.8, 64.3 சதவீதங்களாகப் பதிவாகியிருந்தது.

இது கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 69.8 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. (ஏ-இ)





# காந்தி ஜெயந்தி தினம் யாழில் முன்னெடுப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 3

மகாத்மா காந்தியின் 153 ஆவது பிறந்ததின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றன. யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ். போதனா மருத்துவமனை வீதியிலுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை பிரதி முதல்வர், மாநகர சபை ஆணையாளர் மற்றும் அரசியல் சமூகப் பிரதிநிதிகள், இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன் 'காந்தீயம்' ஏட்டை வெளியிட்டு வைக்க இந்திய துணைத் தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். (ச-20)

# தோட்டாக்கள் சுன்னாகத்தில் மீட்பு!

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் மின்விநியோக நிலைய பின்புறக் காணியிலிருந்து ஒரு தொகை தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியை நேற்றுமுன்தினம் மின்விநியோக நிலைய ஊழியர்கள் துப்புரவுக்குட்படுத்திய போது சந்தேகத்துக்கிடமான பொதியொன்றை அவதானித்த நிலையில் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த பொதியை சோதனையிட்டு ஒருதொகை தோட்டாக்களை மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளையும் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-125)

# இரவுநேர களியாட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்

## டயானா கமகே வலியுறுத்து

கொழும்பு, ஒக். 3

நாட்டில் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கும் அவர்கள் செலவிடுவதை ஊக்குவிக்கவும் அரசாங்கம் இரவுநேர களியாட்ட நிகழ்வுகளுக்கு புத்துயிர் அளிக்கவேண்டுமென சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் இரவுப் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இரவு வேளையில் மக்கள் வெளியில் சென்று மகிழ்ந்து அதன் மூலம் அரசாங்கத்துக்கு பணம் ஈட்டுவதே எமது நோக்கம். இல்லாவிட்டால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது.

இரவுவேளையில் சுற்றுலாப் பயணிகள் பணத்தைச் செலவழிக்க எமது நாட்டில் 'இரவுக் களியாட்டக் கலாசாரம்' உருவாக்கப்படவில்லை. சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளைப் போல் இரவு நேரத்தில் களியாட்டங்கள் பொழுது போக்குகள் எதுவும் இங்கில்லை.

அத்துடன் செலவழிக்கக் கூடிய வருமானமுள்ள உள்ளூர் மக்களும் தங்கள் பணத்தை செலவழிக்க வெளிநாடுகளை நோக்கிச் செல்கின்றனர். இலங்கையர்களும் தங்கள் பணத்தைச் சேகரித்து அதை டொலராக மாற்றி, மலேசியா, சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளுக்குக் கொடுக்கிறார்கள்.

நாம் இரவு வாழ்க்கையை கலாசாரம் மற்றும் மதத்தோடு சம்பந்தப்படுத்துகின்றோம்.

நாம் அங்கேயே நின்று கொண்டிருந்தால் நாடு வளர்ச்சி நிலையை எட்டாது. ஒவ்வொருமுறையும் இந்த நாடு ஏதாவது ஒரு வகையில் வளர்ச்சியடைய முயற்சிக்கும்போது, மக்கள் மதம், கலாசாரப் பிரச்சினையை முன்னிறுத்தி நாட்டை திவாலான நிலைக்கு சிலர் கொண்டு செல்கின்றனர் - என்றார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கின்றது மந்தபோசணை!

## மருத்துவர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 3

**அம்பாந்தோட்டை, சூரியவெளவில் மந்தபோசணை 80 வீதமாக அதிகரித்துள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நாடெங்கிலும் இந்த நிலைமை தீவிரமாகும் என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இந்த புள்ளிவிவரங்கள் பொய்யானவை என யாராவது கூறினால் அவர்களுடன் விவாதத்துக்குத் தயார் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கலாநிதி சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அம்பாந்தோட்டை மட்டுமன்றி கொழும்பு பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களும் தற்போது போஷாக்கு குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க மருத்துவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்வதை அரசாங்கம் தடுக்கின்றது- என்றார். (எ-இ)



## மந்தபோசணை பிரச்சினை அப்பட்டமான புனைவுகளே!

### சுகாதார அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக். 3

நாட்டில் சிலர் கூறுவதைப் போன்று மந்தபோசணைப் பிரச்சினை எதுவும் இல்லை. அதிக ஊட்டச்சத்துக் குறைபாடு திடீரென உருவானது என்பதை நம்ப முடியாது. இவ்வாறு சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உணவுப் பணவீக்கம் காரணமாக ஒரு குடும்பத்தின் உணவு முறையில் மாற்றங்கள் ஏற்படுவதை ஒப்புக்கொள்கின்றோம். இதன் மோசமான விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும். எனினும் அவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

உணவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் நாட்டு மக்களின் ஊட்டச்சத்து நிலை வீழ்ச்சியடைந்து அதிக ஊட்டச்சத்துக் குறைபாடு திடீரென உருவானது என்பதை நம்ப முடியாது. மந்தபோசணை தொடர்பான 85 சதவீதக் கதைகள் அப்பட்டமான பொய் - என்றார். (எ-இ)

## ஓட்டோ கட்டணத்தில் மாற்றமில்லை

கொழும்பு, ஒக். 3

பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் கட்டணங்களில் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்று முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கங்கள் தெரிவித்துள்ளன. வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முச்சக்கரவண்டிக் கட்டணங்களைத் தற்போது குறைக்கமுடியாது என்றும் அவை தெரிவித்துள்ளன. வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை மேலும் 10 லீற்றரால் அதிகரிக்க வேண்டும் என்றும் அவை கோரிக்கை விடுத்துள்ளன. (எ-இ)

## மின்கட்டண உயர்வால் பலரும் வேலை இழப்பு

கொழும்பு, ஒக். 3

மின்கட்டண அதிகரிப்பால் பல நிறுவனங்களை நடத்த முடியாமற் போயுள்ளது என்றும், சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்து வீதிக்கு வரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் மின்கட்டணம் பலமடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. மின்கட்டண அதிகரிப்பால் வரம்பற்ற நட்டம் ஏற்படுவதால் பல நிறுவனங்கள் மூடப்படும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில் வல்லுநர்கள் வேலை இழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. விடுதிகள், உணவகங்கள் மற்றும் உல்லாச விடுதிகள் என்பவை மூடப்படும் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் பிரதான இடங்களாகும் என இலங்கை ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் உப தலைவர் பிரியந்த திலகரத்ன தெரிவித்தார்.

அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக, நாடு முழுவதும் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட தங்கும் இடங்கள் மூடப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை- விடுதிகளை நடத்துவதற்கான மின்சாரக் கட்டணத்தில் நிவாரணம் வழங்கவேண்டுமென்று இலங்கை விடுதிகள் உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது நிலவும் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக சில நிறுவனங்கள் தங்களது ஊழியர்களைப் பணிநீக்கம் செய்யும் வகையில் பல்வேறு திட்டங்களை ஏற்கனவே அறிமுகம் செய்துள்ளன என்று அண்மைக்காலமாக சுட்டிக்காட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## சபுகஸ்கந்தவிலிருந்து அதிகளவு துர்நாற்றம்

கொழும்பு, ஒக். 3

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் அதிக துர்நாற்றம் வீசுவதாக அதனை அண்மித்து வாழும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து அதிக துர்நாற்றம் வீசுவதுடன், தமது அன்றாட நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தவிடயம் தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக பியகம பிரதேச சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து வெளியேறும் புகையில் கந்தகத்தின் அளவு அதிகரித்துள்ளமையினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)

## தடுப்பூசி ஏற்றுவதில் அலட்சியம்; கொரோனா தீவிரமாகும் அபாயம்

கொழும்பு, செப்.3

கொரோனாத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை. இதன் விளைவுகளை மக்கள் எதிர்நோக்க நேரிடும் என்று தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமித கினிகே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

60 வயதைக் கடந்தவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனாத் தொற்றுக் காரணமாக நோய் நிலைமைகள் அதிகரித்தல் மற்றும் உயிரிழப்புக்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் அதிகம்.

எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் ஏற்படக்கூடிய காலநிலை மாற்றத்தால் மீண்டும் கொரோனா வேகமாக பரவும். இது 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குப் பாதிப்பாக அமையும். அதனால் கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளவதில் அலட்சியம் காட்டக் கூடாது- என்றார். (எ-இ)

## மருந்துகள் பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்ட சேவை!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

கொழும், ஒக். 3

மருந்துகளின் பற்றாக்குறையால் நாடளாவிய ரீதியில் மருத்துவமனைகளின் ஆய்வுகூட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

லேடி ரிஜ்வே மருத்துவமனை உட்பட நாட்டின் பிரதான மருத்துவமனைகள் தொடர்ந்தும் அன்டிபயோட்டிக்ஸ் மற்றும் வலி நிவாரணிகள் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன என தெரிவித்துள்ள அரசமருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் வாசன் ரட்ணசிங்கம், பஞ்சு போன்றவற்றுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சில மருத்துவமனைகள் சாதாரண அறுவைச் சிகிச்சைகள் தொடர்பாக மட்டும் கவனம் செலுத்துகின்றன. சில மருத்துவமனைகள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்கின்றன. முற்றாக அறுவைச் சிகிச்சைகளை ஒத்திவைக்காத அதேவேளை அவசர அறுவைச் சிகிச்சைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன. பற்றாக்குறைகள் உள்ளபோதிலும் கொழும்பு லேடி ரிஜ்வே மருத்துவமனை தொடர்ந்தும் இயங்குகின்றது. சிலவகை மருந்துகளைக் கேட்டால் அவை மருந்துகள் விநியோகப் பிரிவில் இல்லாத நிலை காணப்படுகின்றது- என்றார். (எ-இ)

## மஹிந்த கையில் அதிகாரம்: நெருக்கடியில் ஜனாதிபதி!

கொழும்பு, ஒக். 3

பதவி வெற்றிடங்களுக்கு ஆள்களை நியமிக்கும் அதிகாரத்தைத் தற்போதும் மஹிந்த ராஜபக்ச வைத்திருப்பதால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளார் என கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ச விலகியிருந்தாலும் சில அதிகாரங்களைத் தற்போதும் தன்வசம் வைத்துள்ளார் என்றும் நாடாளுமன்றத்தில் பலம் இல்லாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதை மீறிச் செயற்பட முடியாத நிலைமையில் உள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பதவிகளை நியமிக்கும் அதிகாரத்தை மஹிந்த ராஜபக்ச வைத்திருப்பதால் அரசாங்கத்தில் உள்ளக நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி விரும்பியவகையில் பதவிகளில் மாற்றங்களைச் செய்ய முடியாதவாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றது என்றும், அதனால் ஜனாதிபதியின் நிர்வாகத் திட்டங்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளன என்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இந்த நிலைமை நீடித்தால் விரைவில் பொதுத்தேர்தல் ஒன்றை ஜனாதிபதி அறிவிப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோணேஸ்வரர் ஆலயத்துக்கு இந்திய உதவிகள் கிடைக்கும்

## இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே உறுதி

**கொழும்பு, ஒக். 3**

**திருக்கோணேஸ்வரர் ஆலய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவும் என்று சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**



திருக்கோணஸ்வர ஆலயத்துக்கு நேற்றுச் சென்ற அவர், பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டதுடன், ஆலய நிர்வாகப் பணிகளையும் பார்வையிட்டார். கோயில் நிர்வாகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடிய இந்தியத் தூதுவருக்கு, பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு வழங்கப்பட்டது.

அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரலாற்று முக்கியத்துவம் கொண்ட திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு வந்திருக்கின்றேன். ஆலயத்தின் தொன்மையான வரலாறு, பூர்வீகமான விடயங்கள் அனைத்தையும் அறிஞர்களும், ஆலய நிர்வாகிகளும் எனக்கு நிறைந்த தெளிவுடன் அறியத் தந்திருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்திருக்கின்றது. இந்த ஆலயம் ஒரு புனிதமானது மட்டுமல்ல, நாயன்மார்களால் பாடப்பட்ட ஒரு ஆலயம் என்பதை நான் அறிவேன்.

இந்த ஆலயத்தினுடைய எதிர்காலம் நன்றாக அமைய வேண்டும். இங்கு ஒரு இராஜகோபுரம் அமைக்கப்பட இருக்கின்றதையும் ஆலய நிர்வாகிகள் எனக்குத் தெரிவித்தார்கள். அந்த விடயம் தொடர்பாகவும் இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தும் - என்றார்.

அதேவேளை, திருக்கோணேஸ்வரர் ஆலயச் சூழலை பௌத்த மயமாக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்றுள்ளார். (எ-இ)



## தேசிய கதைகூறல் போட்டிக்கு கல்வயல் வித்தி. மாணவி தெரிவு

**சாவகச்சேரி, ஒக். 3**

இந்த ஆண்டு கலாசார திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டியில் பாலர் பிரிவு கதைகூறல் போட்டிக்கு சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய மாணவி உமாகரன் டனுசிகா தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-14-9)

## நாட்டில் பரவலாக மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஒக். 3

நாட்டின் பல பகுதிகளில் இன்று மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, காலி, கண்டி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும். சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும். ஊவா மாகாணம் மற்றும் அம்பாறை மாவட்டத்தில் மாலை அல்லது இரவில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் மணிக்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும்போது பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)



எழுதுமட்டுவாழில் திடீர் சோதனை

## மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் அழிப்பு!

சாவகச்சேரி, ஒக். 3

எழுதுமட்டுவாழில் நேற்றுமுன்தினம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் நடத்தப்பட்ட திடீர் உணவுப்பாதுகாப்பு பரிசோதனையின்போது மனித பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

உணவுப்பாதுகாப்பை உறுதிசெய்யும் முகமாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் நேற்றுமுன்தினம் எழுதுமட்டுவாழ் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உணவகங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது மனிதப் பாவனைக்கு உதவாத வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட உணவுகள், காலாவதியான உணவுப்பொருள்கள் என்பன கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் குறைபாடுகளை உடன் நிவர்த்தி செய்யுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ச-9)

## பல்கலை மாணவர்கள் மீது கொலைவெறித் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நடந்து சென்றுகொண்டிருந்த நான்கு மாணவர்கள் மீது, மதுபோதையில் முச்சக்கரவண்டியில் நால்வர் கொலைவெறித் தாக்குதலை நடத்தியதுடன், கத்தி முனையில் அச்சுறுத்தியுமுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த இரண்டு மாணவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரவு உணவுக்காகச் சென்றுவிட்டு மீண்டும் தம் அறைகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-125)

## அனுமதிப்பத்திரமின்றி கால்நடைகள் கடத்தல்

### சந்தேகநபர்கள் கைது



கிளிநொச்சி, ஒக். 3

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 22 மாடுகளை ஏற்றிச்சென்ற சந்தேகநபர்கள் மூவரை தருமபுரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

வேறு மாவட்டத்துக்கு லொறியொன்றில் கால்நடைகள் ஏற்றிச்செல்லப்படுகின்றன என பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த லொறி மறிக்கப்பட்டுச் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது கால்நடை மருத்துவ அதிகாரியின் மருத்துவப் பரிசோதனை சான்றிதழ் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழ் ஆகியவை இன்றி மாடுகள் ஏற்றிச்செல்ல முற்பட்டமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து அவற்றை ஏற்றிச் செல்ல முற்பட்ட மூவரை பொலிஸார் கைதுசெய்தனர். சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## போதைக்குப் பின்னுள்ள அரசியல்

வடக்கில் அண்மைக்காலமாக உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் பாவனை மிக அதிகரித்திருப்பதால் கவலையடைவதாக ஒருபாட்டம் அழுதுதீர்த்திருக்கிறார் சிறிலங்காவின் பிரதமர் தினேஷ் குணவர்த்தன. ஹெரோய்ன் என்ற ஆபத்தான விடயம் அதிகரித்து வருவதைப் பார்த்து கவலையடையவதற்காகவா பிரதமர் ஆசனத்தில் அவர் குந்தியிருக்கிறார்? எப்படி இந்தக் ஹெரோய்ன் பாவனையைக் கட்டுப்படுத்தலாம் என்று ஏதேனும் திட்டங்களை வகுத்து, அதனை நடைமுறைப்படுத்துவதல்லவா அரசாங்கத்தின் பணி? அப்படிச் செய்யவேண்டியதைச் செய்யாமல், கவலைப்படுவதாக அவர் விடுகின்ற அறிக்கையால் என்ன பயன்?

ஆனாலும், இன்னொருவகையில் பார்த்தால், வடக்கில் ஹெரோய்ன் பாவனை அதிகரிப்புக்கு சிறிலங்கா அரசாங்கத்திடம் இவ்வாறான கவலை தெரிவிப்புக்களைத் தவிர வேறேதும் எதிர்பார்க்க முடியாது என்பதும் உண்மைதான். ஏனெனில் இப்போது வடக்கை ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருக்கும் ஹெரோய்ன் போன்ற போதைப்பொருள்களின் வருகைக்கும், பரவுகைக்கும் பின்னணியில் இருப்பது அதிகார சக்திகளே. இந்தப் போதைப்பொருள் திணிப்பு என்பது இன்று, நேற்று தொடங்கியதல்ல. போர் முடிவுக்கு வந்தகையோடு தமிழர் பகுதிகளில், கண்ணுக்குத் தெரியாத 'போதைப்போரை' ஆளும் வர்க்கம் ஏவிவிட்டிருந்தது. படைத்தரப்பினரே, தமிழ் இளையோரிடத்தே இத்தகைய போதை மருந்துகளைக் கொடுத்து நுகரவைத்த சம்பவங்களும் அதிகளவில் பதிவாகியிருந்தன. ஆனாலும், இத்தகைய போதைச்சதிக்குள் அவ்வளவு எளிதாக எம்மினத்தை வீழ்த்த முடியாது என்ற அலட்சியமும், 'எங்கள் பிள்ளைகள் தடம் மாறிச் செல்லமாட்டார்கள்' என்ற மிதமிஞ்சிய நம்பிக்கையும் மீளமுடியாத போதைப்படுகுழிக்குள் இப்போது நாங்கள் சிக்கியிருப்பதற்கான காரணங்கள்.

போதையூடாக ஓர் இனத்தின் இலட்சியப் பாதையை மாற்றுதலென்பது சிறிலங்கா அரசு கண்டுபிடித்த யுக்தியல்ல. பல நூற்றாண்டுகளாக, அதிகாரத் தரப்பினர் அல்லது ஆக்கிரமிப்பாளர்கள் இத்தகைய தந்திரத்தைக் கையாண்டே பல நாடுகளை கத்தியின்றி, இரத்தமின்றி தங்கள் காலடிக்குள் வீழ்த்தினர். இலங்கையைக் கைப்பற்றிய ஒல்லாந்தர், போர்த்துக்கேயர், ஆங்கிலேயரும் இத்தகைய தந்திரத்தை பலமுறை பிரயோகித்து, அடங்க மறுப்பவர்களையெல்லாம், மகுடிக்கு கட்டுண்ட பாம்புகளாக ஆடவிட்டு வேடிக்கை பார்த்தார்கள். அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களையும் இதே போதைக்கு அடிமையாக்கும் பொறிக்குள் சிக்கவைத்தே, வெள்ளையர்கள் தங்கள் ஆக்கிரமிப்புக் கனவைப் பத்திரமாகப் பாதுகாக்க முடிந்தது. இன்றளவும் பலநாடுகளில், அந்த நாடுகளுக்குரிய பூர்வீகக் குடிகளுக்கு, சலுகை விலையில் மதுபானம், போதைப்பொருள்கள் என்பவற்றை ஆளும் தரப்பினர் வழங்கி வருவதன் இரகசியமும் இதுதான்.

எனவே இப்போது வடக்கில் தலைவிரித்தாடும் ஹெரோய்ன் போதைப்பாவனைக்கு பின்னால் அதிகாரத்தின் கரங்கள் இருப்பதையும், அதன் பின்னால் எங்கள் இனத்தின் இலட்சியப் பாதையை திசைதிருப்பும் அரசியல் ஒளிந்திருப்பதையும் எவரும் மறுக்க முடியாது. தினேஷ் குணவர்த்தன, இதயசுத்தியுடன், வடக்கில் பெருகும் போதைக்கலாசாரம் பற்றி கவலையுறுவானாரால், அவர் செய்யவேண்டியதெல்லாம், முப்படைகளையும் களத்தில் இறக்கி, போதை வியாபாரிகளைக் கைதுசெய்து, அந்தப் போதைப்பொருள்களின் விநியோக மார்க்கத்தை தகர்ப்பதும்தான். அதைச் செய்யாமல் வெறுமனே நீலிக்கண்ணீர் வடிப்பதால் எதுவுமாகிவிடப்போவதில்லை.

### நாளொரு நல்வார்த்தை

நீங்கள் இன்று செய்ததையே நாளையும் செய்தால், இன்று உங்களுக்குக் கிடைத்ததே நாளையும் கிடைக்கும்.

- பெஞ்சமின் பிராங்ளின்

சிறுவர் தினம்



# அரசமைப்பின் பிரகாரம் ஆட்சி கவிழ்க்கப்படும்!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 3**

**'அரசமைப்பின் பிரகாரமே தற்போதைய ஆட்சி நிச்சயம் கவிழ்க்கப்படும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் ஜனநாயக வழியில் நாம் மேற்கொள்வோம். மக்களும் புதிய ஆட்சியையே வலியுறுத்தி நிற்கின்றனர்.**

இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான 'சுதந்திர மக்கள் சபை'யின் முக்கியஸ்தரும், சட்டத்துறைப் பேராசிரியருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தற்போதைய அரசாங்கத்துக்கு இதயம் இல்லை, இரக்கமும் இல்லை. அதனால் மக்களின் அவலக்குரல் கேட்பதும் இல்லை. பிள்ளைகளுக்கு உண்ண உணவு இல்லை. பாடசாலை மாணவர்கள் மயங்கி விழுகின்றனர். இவற்றுக்குத் தீர்வைத் தேடாமல் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவ்வாரம் 12 அமைச்சர்களும் நியமிக்கப்படவுள்ளனர் என அறியமுடிகின்றது.

அதுமட்டுமல்ல மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருக்கு வாகனமொன்றும், 300 லீற்றர் எரிபொருளும் வழங்கப்படவுள்ளது. நாட்டு மக்கள் திண்டாடும்போது, அமைச்சர்களின் சுகபோகங்களுக்காக அரச நிதியைப் பயன்படுத்துவது எந்தவிதத்தில் நியாயம்?

ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சி நடப்பதாக அரசாங்கம் சொல்கின்றது. இது தொடர்பில் விசாரணையும் இடம்பெறுகிறதாம். இது தொடர்பில் விசாரணை நடத்த அவசியமில்லை. அரசாங்கம்மீது மக்கள் அதிருப்தியிலேயே உள்ளனர்.

எனவே, ஆட்சியைக் கவிழ்க்க ஜனநாயக வழியில் நாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். இதற்கான வாய்ப்பு எதிர்காலத்தில் உருவாகும். மக்களும் இதனையே எதிர்பார்க்கின்றனர்' - என்றார். (ம-44)

## நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகிறது இன்று

கொழும்பு, ஒக். 3

ஒக்ரோபர் மாதத்துக்கான முதல்வார நாடாளுமன்றக் கூட்டத்தொடர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று ஆரம்பமாகின்றது.

இதுவரை பல்வேறு காரணங்களால் நாடாளுமன்றத்தில் கேட்கப்படாத வாய்மூல விடைக்கான 50 கேள்விகளுக்காக காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை, நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒக்ரோபர் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை தவிர 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை தினமும் காலை 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 மற்றும் 7ஆம் திகதிகளில் அரசமைப்புக்கான 22ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பான விவாதம் நடத்தப்படவுள்ளது. (ம-44)

**நாளை** 04.10.2022 செவ்வாய்க்கிழமை புரட்டாதி - 17

சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம்: 03.02 - 04.32

ஆயுத பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல சிறுவர்களுக்கும் போஷாக்கான உணவு

### சிறுவர் தின நிகழ்வில் ஜனாதிபதி திடசங்கற்பம்



கொழும்பு, ஒக். 03

நாட்டின் அனைத்து சிறுவர்களுக்கும் ஊட்டச்சத்தான உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது ஜனாதிபதி என்ற வகையில் எனது கடமையாகும். நாட்டின் தற்போதைய தலைமுறைக்கு போஷாக்கான உணவை வழங்குவதும், எதிர்கால சந்ததியினருக்கு அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதுமே இன்று எனது நோக்கமாகும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

இற்றைக்கு சில ஆண்டுகளுக்கு முன்னர், சிறுவர்கள் வாழ்ந்த சமூகப் பின்னணியில் இருந்து தற்போதைய சமூகப் பின்னணி மிகவும் வித்தியாசமானது என்பது தெளிவாகிறது. சமகால சமூகத்தில் வாழும் பெரியவர்களான நாம் அணுகக்கூடிய உலகம் அல்ல சிறுவர்களின் உலகம். அது மிகவும் எளிமையானது. அவர்கள் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். பெரியவர்களாகிய நாம் இதை புத்திசாலித்தனமாக புரிந்துகொண்டு அவர்களுக்கான உன்னதமான உலகத்தை உருவாக்க வேண்டும் இத்தகைய பின்னணியில், நான் முன்வைத்த கொள்கை அறிக்கையின் பிரகாரம், ஏழை மற்றும் வசதி குறைந்தவர்களைப் பராமரிப்பதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கு நிறை உணவு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் முதற்கட்டமாக 10 லட்சத்து 80 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவாக போஷாக்குள்ள நிறை உணவு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இது சுகாதார அமைச்சின் ஊட்டச்சத்து நிபுணர்களின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டமாகும்.

சிறுவர்களின் அழகிய குழந்தைப் பருவத்தையும், நமது நாட்டின் வளர்ச்சிக்காக அளவில்லா தியாகங்களைச் செய்த முதியோர் சமூகத்தையும் பராமரிப்பது நமது கடமையாகும். அது நமது கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. உணவு, கல்வி, விளையாட்டு, அழகியல், ஓய்வு, உறக்கம், மனநலம், உடல் ஆரோக்கியம் போன்றவை சிறுவர்களின் தேவைகளில் சிலவாகும். அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் கலாசார ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களின் தேவைகளை தாமதமின்றி நிறைவேற்றுவது, அரசாங்கத்தைத் தவிர பெற்றோர், ஆசிரியர் மற்றும் சிவில் அமைப்புகளின் பொறுப்பாக நான் கருதுகிறேன் - என்றுள்ளது. (ம)



## கட்டணம் செலுத்தாததால் மின் இணைப்பு துண்டிப்பு

முல்லைத்தீவு, ஒக். 3

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் அமைந்துள்ள புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குச் சொந்தமான பொதுநூலகத்துக்கான மின்சார இணைப்பு மின்சார சபையால் துண்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்தக் கட்டணம் செலுத்தப்படாததாலேயே கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மின்சார இணைப்பை மின்சார சபையினர் துண்டித்துள்ளனர்.

குறித்த நூலகத்தில் அதிகளவான வாசகர்கள் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்களைப் படித்து வருகின்றனர். தற்போது மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதால் நூலகத்துக்குச் செல்லும் பலர் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். (ஒ-14-19)

## பெறுபேறு குறைவான விளையாட்டு வீரர்களுக்கு பட்டப்படிப்புக்கு வாய்ப்பு

கொழும்பு, ஒக். 3

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் குறைவான பெறுபேறுகளைப் பெற்ற தேசிய விளையாட்டு வீரர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம் என விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி அவர்கள் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யமுடியும் என விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் அமல் எதிரிசூரிய தெரிவித்தார். (ச-இ)

## வாசகர் திருமுகம்

### பயணிகளே பணம் பத்திரம்!

கடந்த மாதத்தில் உதயன் பத்திரிகை, எமது மண்ணில் சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்து வருவதைப் பற்றி ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தான். சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்கள் மீது, வரவேற்பை அந்தப் பத்தி பெற்றிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லாதுவிடினும், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அதற்கான எமது வகிபாகத்தை உணர்ந்து கொள்வதிலும் சற்றுத் தீவிரமாக செயற்படவேண்டியது காலம் எமக்கிட்டிருக்கும் பெரும் பொறுப்பாகும்.

இதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியது ஏனெனில், அண்மையில் காங்கேசன் துறை வழித்தடத்தில் (769) மினிபஸ் ஒன்றில் பயணித்தபோது நடைபெற்ற சம்பவம்தான்.

அன்றையதினம் சேவையில் ஈடுபட்ட மினிபஸ்கள் குறைவாகவே காணப்பட்டன. யாழிலிருந்து புறப்படும்போதே மினிபஸ் பயணிகளால் நிறைந்துவிட்டாலும் வழியில் நின்றவர்களை ஏற்றிக்கொண்டே நான் பயணித்த மினிபஸ் விரைந்தது. சுன்னாகம் பஸ் நிலையத்தில் இறங்குபவர்களைவிட ஏறுபவர்களே கூடுதலாக இருந்த நிலையில் அருகிலிருந்த வங்கிக்குச் சமீபமாக சிலரை இறக்கிவிட்டு, மினிபஸ் விரைந்தது.

பஸ்ஸில் இருந்து இறங்கியவர்களில் ஒருவர் தனது காசைக் காணவில்லை எனப் பதறினார். இனி வீடு செல்வதற்கும் காசு இல்லை என அவர் வெதும்பியதுதான் பரிதாபமாக இருந்தது. தென் பகுதியில்தான் இந்த மாதிரியான பிற்பொக்ற் சம்பவங்கள் சர்வசாதாரணம். ஆலயத்திருவிழாக்களில் நகைகளை அபகரிப்போர் பெரும்பாலும் வெளிமாவட்டத்தவர்களே என்ற செய்திதான் இங்கு ஞாபகம் வருகின்றது.

அடுத்தவன் மடியில் கைவைக்கும் இந்த ஈனர்களை வளரவிடாது பொதுமக்களுக்கு உதவ துறைசார் அதிகாரிகள் முன்வரவேண்டும். அதிக நெரிசலான பஸ்களில் ஏறுவதை இயன்றவரைக்கும் தவிர்ப்பதுடன் முடியாதவிடத்து அதே சமயம் எம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள பயணிக்கும்போதே எச்சரிக்கையாக இருக்கவேண்டியதுடன், கொண்டு செல்லும் பணத்தை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பதும், அவசியமாகிறது. இல்லாதுவிடின் திருடர்களை வளர்த்துவிட்டு ஏற்கனவே நொந்து நூலாகிப்போயிருக்கும் எமக்கு நாமே அடாதுசெய்தவர்களாவோம்.

**கி.வே.கிருஷ்ணானந்தன்**
சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்




## அதிபர் வெற்றிடத்தால் பாடசாலைகள் சிரமம்


### இலங்கை அதிபர் சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டு

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் அதிபர்களின் வெற்றிடத்தால் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று இலங்கை அதிபர் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படாததன் காரணமாக நாட்டில் தற்போது 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிபர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 60 ஆக மட்டுப்படுத்தி யுள்ள நிலையில், இந்த வருடத்தில் பெரு மளவான அதிபர்கள் ஓய்வு பெறவுள்ளனர் என்று இலங்கை அதிபர் சேவைகள் சங்கத்தின் தலைவர் சுனில் பிரேமதிலக தெரிவித்துள்ளார். (ம-14,இ)

## நெல் கொள்வனவில் கூ.சங்கங்கள் ஆர்வம்



யாழ்ப்பாணம், ஒக். 3

சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் அதிக ஆர்வம் செலுத்தியுள்ளன. நெல் கொள்வனவில் ஈடுபடும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி வங்கி என்பன கடன் அடிப்படையில் நிதியுதவியை வழங்கி வருகின்றன. இந்த நிதியுதவியைப் பயன்படுத்தியே நெல் கொள்வனவில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபாடு காட்டியுள்ளன. (ம-14,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 16 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 06 . 04 . 1936

விண்ணில் 18 . 09 . 2022

கடந்த (18.09.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப குல விளக்கு

அமரர் திருமதி

## இளையதம்பி யோகேஸ்வரி (யோகேஸ்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.10.2022) திங்கட் கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 06.10.2022 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"ஈஸ்வரி வாசா"
கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி. (cs46900) (2.6)

குடும்பத்தினர்
077 376 0575

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

# தீபாவளி
## ஜவுளிக் கொண்டாட்டம்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான
தலைசிறந்த ஆடைகள்
திருமணப் பட்டுச்சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
Tops, Party Frocks,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
சேட், T.சேட், சிறுவர்,
சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகள்




# இந்தியன் செலக்ஷன்

இது பிரமாண்ட ஜவுளித் துறையின்
சாம்ராஜ்யம்

காலம் : 01.10.2022 முதல் 25.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

# மரண அறிவித்தல்



மலர்வு 15 - 09 - 1977

உதிர்வு 08 - 09 - 2022

## அமரர் சிவசுப்பிரமணியம் சியோ

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 37/42, 1ஆம் ஒழுங்கை பிறவுண் வீதியை வதிவிடமாகவும் தற்போது பிரான்ஸை வதி விடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் சியோ அவர்கள் கடந்த (08.09.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மகேந்திரராணி தம்பதி யினரின் பாசமிகு மகனும், வடிவேலு லட்சுமி தம்பதியினரின் மருமகனும், ஞானகௌரியின் அன்புக் கணவரும், அனிக்காவின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரன் சிவிதாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.10.2022) செவ்வாய்க் கிழமை 95, Rue marcel sembat 93430 villetaneuse இடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை கிரியைகள் நடைபெற்று பின்னர் 11.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை (இலங்கை நேரப்படி 12.30 - 4.30) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதன் பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/42, 1ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
076 123 1973
077 584 2468

இங்ஙனம்:
குடும்பத்தினர்
(CS 46902) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 - 06 - 1960

மறைவு 13 - 10 - 2021

## அமரர் திரு. சண்முகம் கனகரத்தினம்

திதி : புரட்டாதி வளர்பிறை அட்டமி ( 03.10.2022 )

ஆண்டொன்று சென்றும் அகலாத வடுக்களோடு ஆழ்ந்திருக்கும்
எம்மைவிட்டு அழியாது உம் நினைவு ஒருபோதும்.

அமைதியின் உறைவிடமாய் அனைவரும் புகழ்கூற வாழ்ந்து
அமைதியாகவே விரைந்தீரோ எம்மைவிட்டு.

ஓராண்டு ஓடினாலும் ஒவ்வொரு நாளும் தவிக்கின்றோம்
பிரிவின் வலி அகலாது.

என்றும் உம் நினைவுகளோடு ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்
செருக்கல்பிள்ளையார் வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுகள் யாவும் இலவசம்**

நவராத்திரி விழாவை முன்னிட்டு மணமகள்களுக்கு மட்டும்

(29.09.2022 முதல் 05.10.2022 வரை)

பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர், வங்கியியலாளர், அரச உயர் பதவியிலுள்ளோர், ஆசிரியர், A/L படித்தவர்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்களும் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. யாழ்ப்பாணம்.**

**077 138 7596, 071 999 9306**



தொல்லியல் திணைக்களத்தால்

# யாழ்.பல்கலை மாணவருக்கு சுற்றுலாப் பயிற்சிப்பட்டறை!

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மத்திய கலாசார நிதியத்தின் அனுசரணையில் உலக சுற்றுலா தினத்தையொட்டி பயிற்சிப்பட்டறையும் பாரம்பரிய கலைநிகழ்வுகளும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் கோட்டையில் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு சுற்றுலா மற்றும் அதன் பயன்பாடு தொடர்பாக மரபுரிமைகளை மையப்படுத்தி இந்த பயிற்சிப்பட்டறையும் பாரம்பரிய கூத்துக்களும் இடம்பெற்றன. இதன்போது யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், பேராசிரியர் சிவலிங்க ராஜா, யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரி பா.கபிலன், மத்திய கலாசார நிதியத்தின் யாழ்.பல்கலைக்கழக கலாசார சுற்றுலாத்துறை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-125)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

### 2023 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2023.01.01ஆம் திகதி தொடக்கம் 2023.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 03.10.2022 – 17.10.2022 பி.ப 2.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 18.10.2022 பி.ப 1.30 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 18.10.2022 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம்.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 12,430,000.00 | |
| 2 | உடுவில் கீளிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 165,000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை -01 | 1,000.00 | 10,000.00 | 3,256,000.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 391,120.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 56,815.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 197,230.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 148,500.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 71,500.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 27,896,000.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 55,110.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 781,440.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 220,000.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,400.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 60,500.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 428,990.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 1,520,200.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 198,000.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2022.11.02ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2022.11.02 ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
4. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
5. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
6. பொது மலசல கூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
7. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதியினை "**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்**" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை "**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்**" எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
8. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
9. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
10. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
11. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
13. இணுவில் வாராந்தச்சந்தை வருமானங்களை ஈட்டும் வேறு தேவைகளுக்கு பயன்படுத்தும் போது சமுர்த்தி வங்கிக்கு அருகிலுள்ள கட்டடத்தொகுதியில் நடாத்தப்படவேண்டும்.
14. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.



காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு சுழிபுரம்மேற்கு கலைமகள் இலவசக் கல்வி நிலைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ச-125)



சமாதான நீதிவான் பேரவையால்

# காந்தி ஜனன தினம் நேற்று முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3


இலங்கை சமாதான நீதிவான்கள் பேரவையின் ஏற்பாட்டில் மகாத்மா காந்தி ஜனன தின நிகழ்வு நேற்றுக் காலை 7.30 மணியளவில் யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ். நகரின் மத்தியிலுள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் சமாதான நீதிவான்கள் பேரவையின் ஆளுநர் சபையின் பணிப்பாளர் சத்தியகுமாரன் போல் தர்ஷன் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் மற்றும் பேரவையின் அங்கத்தவர்கள் எனப் பலர் பங்குபற்றினர். (ச-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
20.12.1933

உதிர்வு
29.09.2022

## திரு. விவேகானந்தா ஹரிதாஸ்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திரு. விவேகானந்தா ஹரிதாஸ் அவர்கள் கடந்த 29.09.2022 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விவேகானந்தா - பரிமளாதேவி தம்பதியரின் அன்பு மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான நடராசா - சிவகெங்கை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகாலக்சுமி யின் அன்புக் கணவரும், சிவானந்தன், சங்கரி, நிர்மலானந்தன், மனோகரி, முருகானந்தன், லோகதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேந்திரன், யோகேஸ்வரன், நந்தினி, தேவகலா, ஜெயந்தினி, சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற விமலாதேவி, மற்றும் மித்திரதாஸ், காலஞ்சென்றவர்களான ஜெகதாஸ், புருஷோத்தமதாஸ், மாலினிதேவி, மாதுரிதேவி, சாரதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹிந்துஷன், பிரணவன், பிரதாபன், அருண்ராஜ், நவீன்ராஜ், லக்ஷ்மன்ராஜ், நிஷாந்தி, ஹரிணி, லோகிதா, சரண்யன், சகானா, தனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2022) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : தகவல் : குடும்பத்தினர்

| | | | |
|---|---|---|---|
| சங்கரி | (மகள்-கனடா) | - 6472063394 | -watsup,viber |
| சிவானந்தன் | (மகன்-கனடா) | - 777174905 | - watsup,viber |
| நிர்மலானந்தன் | (மகன்-பஹ்ரெய்ன்) | - 97336186994 | |
| யோகேஸ்வரன் | (மருமகன்-இந்தியா) | - 919176390167 | |
| முருகானந்தன் | (மகன்-கனடா) | - 4163710946 | - watsup,viber |
| லோகதாசன் | (மகன்-கனடா) | - 776218850 | - watsup,viber |

(CS 46910) (3/6)

## வாணிவிழா

கொடிகாமம், ஒக். 3
கச்சாய் மகா வித்தியாலயத்தின் வாணி விழா நிகழ்வு அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய-159)

✶ ✶ ✶

வரணி மத்திய கல்லூரியின் தமிழ் மொழித் தினவிழாவும் வாணிவிழாவும் அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் பிரதான மண்டபத்தில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய-159)





மன்னார் - பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் சிறப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் ஆலயத்துக்குள் சிறுவர்கள் மற்றும் முதியோருக்கு மலர் கொத்துக்கள் வழங்கப்பட்டன. (ய-60)

## முதியோர் சங்க ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம் - கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 11ஆம் ஆண்டு நிறைவும் சிறப்பு நிகழ்வுகளும் முதியோர் சங்க மண்டபத்தில் கடந்த மாதம் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எம்.பிரதீபன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் சுபாஜினி மதியழகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-14)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு 'வளமான மரக்கன்றுகளை வழங்கி அதன் ஊடாக இயற்கை நிழல்தரும் மரங்களை பெறுவோம்' என்னும் கருப்பொருளில் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட கரவெட்டி இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் கரவெட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ய-27)



## சிறுவர்தின விழா

சாவகச்சேரி, ஒக். 3
சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் சிறுவர் தின விழா நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நிலைய மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ய-9)

✶ ✶ ✶

வயாவிளான் மத்திய கல்லூரியின் சிறுவர்தின சிறப்பு நிகழ்வுகள் அதிபர் வே.த.ஜயந்தன் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.
சிறப்பு நிகழ்வுகளாக துடுப்பாட்ட மைதானம் திறந்து வைத்தல், உடற்பயிற்சி கண்காட்சி, பெண்களுக்கான உதைபந்தாட்ட அணி அங்குரார்ப்பணம், உதைபந்தாட்டப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்



'கொய்க்கா' அபிவிருத்தி
நிகழ்ச்சி நிரலின் கீழ்
கிளிநொச்சி- வடக்கு வலயத்தின்
அதிசிறந்த பாடசாலைகளுள் ஒன்றாகத்
தெரிவு செய்யப்பட்டிருக்கும்
கிளி/ இராமநாதபுரம் கிழக்கு
மகா வித்தியாலயம்
சார்பாக நேற்று 02.10.2022
'தென்கொரியா' நாட்டுக்கு
'கல்வித் தலைமைத்துவம் மற்றும்
முகாமைத்துவம்'
பயிற்சிநெறிக்காகச் சென்ற
எமது பாடசாலை அதிபர்

**திரு. சு.இரவீந்திரன்**

அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகம்
சார்பாக வாழ்த்துக்களைக் கூறிப்
பாராட்டி மகிழ்வதில் பெருமகிழ்வடைகிறோம்

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
கிளி/ இராமநாதபுரம் கிழக்கு மகா வித்தியாலயம்



17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பாலசிங்கம் நடனகுமார் (சிவா)**

திதி: புரட்டாதிமாத பூர்வபட்ச அட்டமி
(03.10.2022)

அன்பிற்காக அன்னையின்
மடியில் சரண்
12.02.1962

ஈழத்துச் சதம்பர நடராஜன்
திருப்பாதக்கமலங்களில் சரண்
10.10.2005

கசியும் எங்கள் கண்களே.....
கரைந்து போன காலங்களே....
மறக்க இயலாத உன் நினைவுகளே
மறைக்க முடியாத உணர்வே .......

நவராத்திரி நன்னாளில்
மறைந்திட்ட எம் உயிரே....
சிவா !!! சிவா !!! சிவா !!!!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

'துவாரகா'
கதிர்காமசுவாமி கோவிலடி,
காரைநகர்.

(cs.46875)

உன் அன்புப் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்


யாழ். பல்கலைக்கழக

# மூத்த விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவியுயர்வு



யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மூத்த விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகப் பேரவை இதற்கான ஒப்புதலை நேற்று வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த பேராசிரியர்களின் விண்ணப்பங்களுக்கான மதிப்பீட்டு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றின்படி கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகங்கள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அருட்கலாநிதி ஜே. சி. போல் றொகான் கிறிஸ்தவ நாகரிகத்தில் பேராசிரியராகவும், நுண்கலைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தா. சனாதனன் நுண்கலைத் துறையில் கலை வரலாற்றுப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ச-20)

---

*யாழ். கோட்டையில்...*

மற்றும் போதைப்பாவனை என்பன இடம்பெறுகின்றன என பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து மாநகரசபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தொல்லியல் திணைக்களத்தினருடன் நேற்றுக் காலை யாழ். கோட்டைப் பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். அதன் பின் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கண்களுக்கு முன்பாக சமூகச் சீரழிவு இடம்பெறுவதை அவதானித்துக்கொண்டிருத்தல் தவறு. உடனடியாக யாழ். கோட்டையைச் சுற்றியுள்ள பற்றைக் காடுகளை துப்புரவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. தொல்லியல் திணைக்களத்தினரோடும் கலந்துரையாடி அவர்களது ஒத்துழைப்புடன் இந்தச் செயற்பாடு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பாணத்தினுடைய வரலாற்றுடன் தொடர்புபட்டது. இந்தப் பிராந்தியத்தை தூய்மையாகவும் சுற்றுலா பயணிகளுக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டிய கடமை எமக்குரியது. இதனை அபிவிருத்தி செய்வதற்கு தமிழ் மக்கள் நன்கொடையளிக்க முன்வரவேண்டும்.

இங்கு இடம்பெறுகின்ற போதைப்பொருள் வர்த்தகம், சமூகச் சீரழிவுகள் ஆகியவற்றை தடுக்க தொடர்ச்சியாக திடீர் சுற்றிவளைப்பு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார். (அ-ஓ-ச-125)


## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி துரைராஜா (கோட்டூர்)**

யாழ். அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராஜா அவர்கள் கடந்த (29.09.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சகுந்தலா அவர்களின் பாசமிகு கணவரும், செல்வகுமார் (பிரான்ஸ்), மேகலா (லண்டன்), ரமேஸ்குமார் (பிரான்ஸ்), அஜந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (லண்டன்), லோகேஸ் (லண்டன்), வைதேகி (பிரான்ஸ்), ஷாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வப்பிரியா, மகிஷா, மிதுஷா, மித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசை அப்பப்பாவும்,அதீசன், சயுன், நிகிஷா(லண்டன்) ஆகியோரின் செல்லத் தாத்தாவும், காலஞ்சென்ற குணரட்ணம், நல்லம்மா, ராசமணி, செல்லமணி, தங்கமணி, மகாலட்சுமி, கதிரமலை, விஜயரட்ணம் (கனடா), மனோன்மணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2022) திங்கட்கிழமை மு.ப 10:00 மணியளவில் தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
செல்வகுமார் - மகன் Mobile : +33148784327
ரமேஸ்குமார் - மகன் Mobile : +94783338682

தகவல்:
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 14 : 13)

தோற்றம்
29 ★ 06 ★ 2000



மறைவு
01 ★ 10 ★ 2022

**ராஜ்குமாரன் அபிஷன்**

(புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவன் 2019 A/L)

அரியாலை தபாற்கட்டைச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோயல் கபே உரிமையாளர் ராஜ்குமாரன் தயாநிதி தம்பதிகளின் இளையமகன் **அபிஷன்** கடந்த 01.10.2022 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் யோயல், அபிஷா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கறுப்பையா இராசம்மா, சுப்பையா மற்றும் இரத்தினேஸ்வரியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் யோசப் பவானி தம்பதியினரின் அன்பு பெறமகனும், சந்திரா ஜோன், ரவி, புஷ்பராஜன், காலஞ்சென்ற குமார் பீற்றர், றஞ்சன், கணேசமூர்த்தி, கருணாநிதி, நந்தன், திரவியராசா, துளசிநாதன் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.10.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மாலை 3 மணிக்கு நடைபெற்று வசந்தபுரம் எக்காளத்தொனி கல்லறைப் பூங்காவில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

125/40, AV றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு
0779287779,
0773892303

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதிய அமைச்சரவையின் பின்னரே

# மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவுக்கு இணைத் தலைவர்கள் நியமனம்

## பிரதமர் தினேஷ் தகவல்

கொழும்பு, ஒக். 3

அமைச்சர்கள் சிலர் விரைவில் பதவி யேற்கவுள்ளனர். அதன் பின்னரே 25 மாவட்டங்களுக்குமான , மாவட்ட ஒருங் கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்படுவார்கள் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள் நியமனம் தொடர்பில் பிரத மரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'அமைச்சர்கள் சிலர் விரைவில் பதவி யேற்கவுள்ளனர். புதிய அமைச்சரவை அமையப்பெற்ற பின்னர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலை வர்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித் துள்ளார். விரைவில் அவை நடை பெறும்' என்று பிரதமர் குறிப்பிட்டார். (அ-ஒ-5-22)

## பாம்பு தீண்டிய மூதாட்டி சாவு!

பாம்பு தீண்டிய மூதாட்டி ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பளை இந்திராபுரத்தில் இடம்பெற்ற இந் தச் சம்பவத்தில் சற்குணநாதன் பூங் கோதை (வயது-68) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை சமை யல் செய்வதற்காக அவர் பனம் கொக் கரையை எடுத்தபோது அதனுள்ளிருந்த சுருட்டைப் பாம்புக் குட்டி கையில் தீண்டி யுள்ளது.

உடனடியாக அவர் பளை மருத்துவம னையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை குணமடைந்த தாகத் தெரிவித்து வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை உடல் நிலையில் மாற்றம் காணப்படவே பளை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். பி.ப. 3 மணியள வில் மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டதால் பளை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டு யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந் துள்ளார். (அ-ஒ-9)

## எரிபொருள் வழங்கல்; சீனாவுடன் பேச்சு

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்ச ருக்கும் சீனாவின் பெட்ரோ சைனா நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் இடை யில் பேச்சு இடம்பெற்றுள்ளது. இதன் போது, நிலுவையில் உள்ள கொடுப்பன வுகள், மீளச் செலுத்தும் முறைமைகள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட் டுத்தாபனத்துக்கு தொடர்ச்சியான விநி யோகத்தை மேற்கொள்வது குறித்து ஆராயப்பட்டதாக அமைச்சர் காஞ்சன ருவிற்றர் கணக்கில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை பெற்றோலி யக் கூட்டுத்தாபனத்துடன் பெட்ரோ சைனா அதிக அளவில் எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டுள்ளதுடன், 10 ஆண்டுகளாக சிறந்த புரிந்துணர்வை கொண்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப் பிடப்பட்டுள்ளார். இந்த நிலையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாப னம், வெளிநாட்டு எண்ணெய் விநியோ கஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய சுமார் 800 மில்லியன் அமெரிக்க டொலர் கொடுப்பனவுகள் நிலுவையிலுள்ளதாக நம்பப்படுகின்றது. (அ-ஒ-இ)

## வன்முறைக் கும்பலின் சூத்திரதாரி கைதாம்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டு வன்முறையில் ஈடுபட்டு வந்த கும்பலின் முதன்மை சந்தேக நபரை கைது செய்துள்ளதாக மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

தாவடியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட் டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

மானிப்பாயில் அண்மையில் இரு வேறு வீடுகளுக்குள் புகுந்து பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்தி யமை கடந்த வருடம் அரியாலை மற்றும் பளையில் வீடுகளுக்குள் புகுந்து அட்டூ ழியத்தில் ஈடுபட்டமை தொடர்பில் குறித்த இளைஞர் தேடப்பட்டு வந்தார்.

அவருக்கு மோட்டார் சைக்கிள் வழங்கி யமை தொடர்பில் ஒருவரும், வன்முறை யில் ஈடுபட்ட இருவரும் என மூவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் முதன்மை சந்தேக நபர் கைது செய்யப் பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபரிடமிருந்து 3 வாள்கள், மோட்டார் சைக்கிள் என்பன சான்றுப் பொருள்களாக கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய மேலும் ஐவர் தேடப்படு கின்றனர் என்றும் பொலிஸார் கூறி னர். (அ-ஒ-26)

### அனியூரிசம்...

சத்திரசிகிச்சை மூலமே தலையின் மேற் பகுதி பிரிக்கப்பட்டு மூளையின் குறித்த குருதிக் குழாயைச் சீர்செய்யும் சிகிச்சை இடம்பெற்றுவந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 60 வயது பெண் ஒருவர், மேற்படி நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவ ருக்கு வழமையாக மேற்கொள்ளப்படு கின்ற சத்திரசிகிச்சைக்கு மாற்றீடாக, கால் பகுதி மூலம் குறித்த குருதிக் குழா யின் பலவீனமடைந்த பகுதியை சீர்செய் யும் சிகிச்சை வெற்றிகரமாக யாழ். போதனா மருத்துவமனையில் முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மூன்று தடவைகள் இந் தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தா லும், வடக்கு, கிழக்கில் முதன்முறையாக யாழ். போதனா மருத்துவமனையில் இப்போதே இத்தகைய சிகிச்சை வெற்றி கரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையின் கதிரியக்கவியல் நிபுணர் அஜ்ரன் ஜெயில் தலைமையில் கொழும்பில் இருந்து வருகை தந்த நிபுணர் குழுவால் இந்தச் சிகிச்சை வெற்றிகரமாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் நோய்த் தொற்று குறைவானதாக இருப் பதோடு, நோயாளி விரைவில் வழ மைக்கு திரும்பவும் முடியும்.

யாழ். போதனா மருத்துவமனையில் குறித்த சிகிச்சை வெற்றிபெற்றமைக்கு பல தரப்பினரும் வாழ்த்துக்களைத் தெரி வித்து வருகின்றனர். (அ-ஒ-5-125)

### மூத்த...

மூத்த பிரஜைகளுக்கான விசேட நிலுவை வைப்பு மற்றும் புதுப்பித்தல் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று இலங்கை மத்திய வங்கியால் வர்த்தக வங்கிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி அமைச்ச ரவை தீர்மானத்துக்கு அமைய, உரிய பணிப்புரைகள் இலங்கை மத்திய வங் கியால் அறிவிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு நிலையான வைப்பாளர் களுக்கு 14.5 சதவீதமான வட்டி வழங் கப்பட்டுள்ள நிலையில் தற்பொழுது 15 சத வீத வட்டி வழங்கப்பட்டது. (அ-ஒ-இ)

### யாழ்....

சீனத் தூதுவர் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இந்த நிதியுதவியை நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் வைத்து இலங்கைக்கான சீனத் தூதுவர் சி செனஹொங் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சீனத்தூதுவரின் முதற் செயலாளர் லீ ஜிங்ரே, யாழ். பல்கலைக் கழக மாணவர் நலச் சேவைகள் பணிப் பாளர் கலாநிதி சி. ராஜ்உமேஸ், சீனத்தூ துவர் நிதியுதவிக்கான யாழ். பல்கலைக் கழக இணைப்பாளர் கலாநிதி மு. தணிகைச் செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

2016ஆம் ஆண்டு முதல் இலங்கையி லுள்ள பல்கலைக்கழக மாணவர்க ளுக்கு சீனத் தூதுவரின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் நிதியுதவி பகிர்ந்து வழங் கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்துக்கும், கிழக்கு பல்கலைக்கழகத்துக்கும் மட்டுமே முழுத் தொகையும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

சீனத் தூதரகத்தின் இந்த நிதியுதவியின் கீழ் மாணவர்களுக்கான மாதந்த உத விப்பணம் உட்பட பல நலனோம்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளன என்று பல்கலைக்கழக நலச் சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, சீனாவிலுள்ள பல்கலைக் கழகத்துக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட இருந்தவேளையில், யாழ். பல்கலையில் சீனத் தூதுவரின் தலையீட்டுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர்ப்பு வெளியிட் டிருந்தது. இதனையடுத்து ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு இடைநிறுத்தப்பட் டது. அதேவேளை, மேற்படி நிதி உதவி வழங்கலுக்கான சீனத் தூதுவரின் பல்க லைக்கழக விஜயமும் நிறுத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### பல்கலை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் நேற் றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

கலைப்பீட மாணவர்களுக்கு கடந்த மாதம் பரீட்சை நடைபெறும் என்று திகதி குறிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பின்னர் அன்றைய தினம் வினாத்தாள் தயார் செய்யப்படாததால் பரீட்சை நடைபெற வில்லை. இதனால் மாணவர்கள் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக மூத வையிடம் தெரியப்படுத்தப்பட்டது. இத னையடுத்து, மூதவையின் பரிந்துரைக்கு அமைவாக, முறையான விசாரணைகள் நிறைவடையும் வரையில் பரீட்சைக் கட மையுடன் தொடர்புடைய 3 பேரையும் கடமை தவறிய குற்றச்சாட்டில் பணி இடைநிறுத்தம் செய்வதற்கு பேரவை தீர்மானித்துள்ளது. (அ-ஒ-5)

### வீடியோ...

மாணவியுடன் இளைஞன் ஒருவன் வீடி யோவில் உரையாடலை சில மாதங்க ளுக்கு முன்னர் மேற்கொண்டுள்ளான். இதன்போது அந்த உரையாடலை பதிவு செய்துள்ளான். மாணவி துவாயுடன் இருக்கும் அந்த உரையாடல் பதிவை தனது உறவினரான இன்னொரு இளை ஞனுக்கும் அவன் அனுப்பியுள்ளான்.

அவ்வாறு தனது நண்பனின் மூலம் கிடைத்த அந்த வீடியோ பதிவை ஏனை யோருக்கும் அனுப்ப உள்ளதாக மிரட்டி மாணவியை அந்த இளைஞன் துஷ்பி ரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளான். அதேவேளை இந்த வீடியோ பதிவு பல இடங்களிலும் பகிரப்பட்டுள்ளது.

மாணவி கல்வி கற்கும் பாடசாலைச் சமூ கத்துக்கு இந்த விடயம் தெரியவந்த தைத் தொடர்ந்து ஆசிரியர்களால் சிறு வர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஊடாக பொலிஸ் நிலையத்துக்கு இது குறித்து தகவல் வழங்கப்பட்டது. இத னையடுத்து வீடியோ பதிவு செய்த இளை ஞனும், அதனைப் பயன்படுத்தி மாண வியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய இளைஞனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ஒ-5)

### முன்னாள்...

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டி யிட்டு வெற்றிபெற்ற இவர், கிளிநொச்சி மக்களுக்காக மாகாணசபையில் தொடர்ச்சி யாக குரல் கொடுத்த ஒருவராவார்.

ஓய்வுபெற்ற கிராம அலுவலரான இவர், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அரசியல் ரீதியில் பெரும் பங்களிப்பை யும் வழங்கியிருந்தார்.

உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவராக இருந்த இவர், ஆலய வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய அகழ்வாராய்ச்சிக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், பௌத்த ஆதிக்கத்துக்கு எதிராக மக்கள் போராட் டங்களையும் முன்னெடுத்தவர் என்ப தும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கால்பந்தாட்டத்தில் வன்முறை 180 பேர் பலி! பலருக்குக் காயம்

## இந்தோனேஷியாவில் பயங்கரம்

**யகார்தா, ஒக். 3**

**இந்தோனேஷியாவில் இடம்பெற்ற கால்பந்தாட்டமொன்றில் வன்முறை வெடித்ததை அடுத்து 180 பேர் வரையில் பரிதாபமாக உயிரிழந்தனர். உள்ளூர் அணியொன்று சொந்த மண்ணில் தோல்வியடைந்தமையால் ரசிகர்களுக்கு ஏற்பட்ட விரக்தியே இந்தக் கலவரத்துக்குக் காரணம் என்று தெரியவருகின்றது.**

இந்தோனேஷியாவில் உள்ளூர் கால்பந்தாட்டப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் கிழக்கு ஜாவாவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்த போட்டியில் அரெமா அணியும், பெர்சிபையா அணியும் மோதின.

இதில் 3:2 என்ற கோல் கணக்கில் பெர்சிபையா அணி வெற்றி பெற்றது. சொந்த மண்ணில் சுமார் 10 வருடங்களுக்குப் பின்னர் அரெமா அணி தோல்வி அடைந்ததால் ரசிகர்கள் கோபம் கொண்டு மைதானத்துக்குள் நுழைந்தனர். இதனால் கலவரம் வெடித்தது. வன்முறையைக் கட்டுக்குள் கொண்டுவர பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகம், தடியடி ஆகியவற்றை நடத்தினர். எனினும் எந்தப் பயனும் ஏற்பட வில்லை. ஆரம்பத்தில் மைதான வளாகத்தில் ஏற்பட்ட கலவரங்கள் பின்னர் வீதிகள், கடைகள் என்று நீடித்தன.

வாகனங்கள் பல தீக்கிரையாக்கப் பட்டன. கடைகள் சில சூறையாடப்பட் டுள்ளன. இந்தக் கலவரத்தில் இதுவரை 180 பேர் உயிரிழந் துள்ளனர். மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் இறப்புக்களின் எண்ணிக்கை அதி கரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. வன்முறையைத் தொடர்ந்து இந்தோனேஷியா வில் ஒருவாரத்துக்கு கால்பந்தாட்டப் போட்டிகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. வன்முறை குறித்து உடனடி விசாரணை நடத்த இந்தோனே ஷிய ஜனாதிபதி ஜோகோ உத்தரவிட்டுள்ளார். (ம)


## வீடு வாடகைக்கு உண்டு

கொடிகாமம் சந்தியில் இருந்து 200 M தூரத்தில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

T.P - 077 153 1167

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து 200m தூரம்
- 20 அடிப்பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 லட்சம் ரூபா மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

077 8748135

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.(50m தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீருற்று நிலம் நல்ல சூழல்
- வீடுகள். திருமண மண்டபங்கள் அமைக்க ஏற்ற இடம்.
- கைதடி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 6 லட்சம் ரூபா மட்டும். தரகர் தேவையில்லை . பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00

0779116983
0770760389


# அரசு பக்கம் சாயும் துமிந்த பதவியை பறித்தது சு.கட்சி!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் பதவியில் இருந்து அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க நீக்கப்பட் டுள்ளார். விரைவில் பதவியேற்கவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அமைச்சரவையில் துமிந்த திஸாநாயக்க அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்வார் என்று கூறப்படுகின்றது.

அதையடுத்தே அவர் சுதந்திரக் கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

துமிந்த திஸாநாயக்க அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டால், அவர்கட்சியில் வகித்து வரும் தேசிய அமைப்பாளர், மத்திய செயற்குழு உறுப்பினர் மற்றும் அநுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகிய பதவிகளில் இருந்தும் நீக்கப் படுவார் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, ஜகத் புஷ்பகுமார, சுரேன் ராகவன், சமர சம்பத் தஸநாயக்க, சாந்த பண்டார ஆகியோர் ஏற்கனவே அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். (எ-இ)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 02பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
- 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை

0772880152
0771488348

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 0772880152

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில்**
**10 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமானநிலையம் செல்லும் பிரதான வீதிக்கு அருகாமை
- தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 750 M தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில

076 755 8606

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி **A9** பிரதான வீதியுடன் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு (நிலப்பரப்பு)

- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்
- காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
- தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

077 8147 389
077 2417 589




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.